Australian Government
AUSTRAC

# தகவல் ஏடு

## 'ஆஸ்ட்ராக்' (AUSTRAC) உடன் பதிவு செய்தல் - பண மாற்றல் சேவை வழங்கும் வர்த்தகங்கள்

***வெளி நாடுகளிலுள்ள குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்குப் பணம் அனுப்புவது போன்ற இன்னொரு இடத்தில் உள்ளவர்களுக்குப் பணம் அனுப்ப வாடிக்கையாளர்களுக்கு உதவும் வர்த்தகம் ஒன்றை நீங்கள் நடத்திவந்தால், நீங்கள் அநேகமாகப் பணம் மாற்றல் சேவையை வழங்கிவருகிறீர்கள் என்று அர்த்தம். இதைப் 'பணம் அனுப்பல்' ('remittance') சேவை என்றும் சொல்லப்படுகிறது.***

### யாரெல்லாம் பதிவு செய்ய வேண்டியிருக்கும்?

பணம் அனுப்பல் சேவையை வழங்கிவரும் அனைத்து வர்த்தகங்களும் 'ஆஸ்ட்ராக்' (**AUSTRAC**) என்றுஅழைக்கப்படும் அவுஸ்திரேலிய அரசாங்க முகமையுடன் கட்டாயம் பதிவு செய்தாக வேண்டும். பணத் துஷ்பிரயோகக் குற்றங்களிலிருந்து ஆஸ்திரேலிய நிதிசார் முறைமையைப் பாதுகாக்க 'ஆஸ்ட்ராக்' உதவுகிறது, மேலும் பயங்கரவாதம் உட்பட்ட நமது தேசியப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களிலிருந்து சமூகத்தினரைப் பாதுகாப்பதில் முக்கியமானதொரு பங்கினை வகிக்கறது.

பண அனுப்பல் சேவையை வழங்குபவர்களுக்கு சாத்தியமான சிறைவாசத்தினை உள்ளடக்கிய கடும் அபராதங்கள் விதிக்கப்படும்.

இந்த சேவைகளை நீங்கள் எப்போதாவது மட்டும் உங்களுடைய வர்த்தகத்தின் ஒரு பகுதியாக அளித்துவந்தாலும், நீங்கள் பதிவு செய்ய வேண்டும்.

நீங்கள் பதிவு செய்யவேண்டுமா என்பதைப் பற்றி உங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை என்றால் austrac.gov.au/start எனும் வலைத்தளத்திற்குச் சென்று நீங்கள் சோதித்துக்கொள்ளலாம்.

வங்கிகள் அல்லது கிரெடிட் யூனியன்கள் போன்ற நிதி நிறுவனங்கள் பதிவு செய்ய வேண்டியதில்லை.

### நீங்கள் பதிவு செய்ய வேண்டிய அவசியம் ஏன்?

தீய வழிகளில் வந்த பணத்தை சட்டப்படியானதாகத் தோன்றும் வகையில் நிதி முறைமைகளின் ஊடாகப் பதுக்கி அனுப்புவதற்காகப் பணம் அனுப்பு சேவை வழங்குநர்களைக் குற்றவாளிகள் இலக்கு வைக்கக்கூடும். ஆட்கடத்தல் மற்றும் வலுக்கட்டாய வேலை, குழந்தைத் துஷ்ப்பிரயோகம், சட்டப்புறம்பான துப்பாக்கி விற்பனைகள், போதைவஸ்து கடத்தல், வரி ஏய்ப்பு, மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி மோசடிகள் மற்றும் இதர வழிகளில் செய்யப்படும் ஏமாற்று வேலைகள் போன்ற பாரதூரமான குற்றச்செயல்களிலிருந்து பெரும்பான்மையான கள்ளப் பணம் பெறப்படுகிறது.

பதிவு செய்யப்படாத பணம் அனுப்பு முகவர்களிடம் ஆபத்துகளை நிர்வகிப்பதற்கும், அவற்றை அறிவிப்பதற்குமான வலுவான முறைமைகள் இல்லாத காரணத்தினால் குற்றவாளிகளால் இவர்கள் தவறாகப் பாவிக்கப்படுவதற்கான ஆபத்து அதிகம். பயங்கரவாதிகளுக்குப் பணம் அனுப்பப் பயன்படுத்தப்படுவதற்கான ஆபத்தும் இவர்களுக்கு அதிகம்.

பதிவு செய்வதென்பது, உங்களுடைய சட்டப்படியான கடமைகளுக்கு இணங்க நீங்கள் நடந்துகொள்ளத் தேவைப்படும் தகவல்களை 'ஆஸ்ட்ராக்' -இனால் உங்களுடன் பகிர்ந்துகொள்ள இயலும் என்பதைக் குறிக்கும்.

குற்றவாளிகளாலும், பயங்கரவாதிகளாலும் உங்களுடைய வர்த்தகம் தவறாகப் பயன்படுத்தப்படும் ஆபத்தினைக் கணிசமான அளவில் குறைக்க இத் தகவல்கள் உங்களுக்கு உதவும். தவறான காரியங்களைச் செய்துவரும் பதிவற்ற வர்த்தகங்கள் மீது 'ஆஸ்ட்ராக்' இன்னும் சிறப்பாகக் கவனம் செலுத்தவும் பதிவு செய்துகொள்வது உதவும். உங்களுடைய வர்த்தகம் மற்றும் பணம் அனுப்பல் சேவைப் பிரிவினரது நற்பெயரைப் பராமரித்துவரவும், பணம் அனுப்பு சேவைகளை அளிக்கும் வர்த்தகங்களுக்கு வங்கி உதவிகள் நிறுத்தப்படுவதைக் குறைக்கவும் நீங்கள் உதவுவீர்கள்.

## அடுத்ததாக நீங்கள் செய்ய வேண்டியது என்ன

பதிவு செய்யப்படாமல் பண மாற்றல் சேவைகளை நீங்கள் வழங்கிவந்தால், இப்போதே அதை நிறுத்திவிட்டு, பதிவு செய்துகொள்வதற்காக 'ஆஸ்ட்ராக்'- உடன் தொடர்புகொள்ளுங்கள்.

**முக்கியம்**

பதிவு செய்யப்படாத முறையில் நீங்கள் பணம் அனுப்பு சேவைகளை வழங்கிவருகிறீர்கள் என்பதை 'ஆஸ்ட்ராக்' கண்டுபிடிப்பதற்குப் பதில் பதிவு செய்துகொள்வதற்காக நீங்கள் சுயவிருப்பப்படி 'ஆஸ்ட்ராக்' உடன் தொடர்புகொள்வது மிக்க நல்லது.

பணம் அனுப்பல் சேவை வழங்குநராக நீங்கள் 'ஆஸ்ட்ராக்'-உடன் பதிவு செய்யப்பட்டதும், 'ஆஸ்ட்ராக்'-இன் 'பணம் அனுப்பல் பிரிவுப் பதிவேட்'(Remittance Sector Register)டில் நீங்கள் அட்டவணைப்படுத்தப்படுவீர்கள்.

'பணம் அனுப்பல் பிரிவுப் பதிவேட்'(Remittance Sector Register)டில் தேடலை மேற்கொள்வதன் மூலம் யார் பதிவு பெற்றிருக்கிறார்கள் என்பதை நீங்கள் சோதித்துக்கொள்ளலாம் - austrac.gov.au/remittanceregister

## பதிவு செய்வது எப்படி

பதிவு பெற்ற ஒரு பண மாற்றல் சேவை வழங்குநராக ஆவதற்கு, www.austrac.gov.au/registernow எனும் வலைத்தளப் பக்கத்தில் கிடைக்கும் '*ஆஸ்ட்ராக் வர்த்தக விபரப் படிவம்*' (*Austrac Business Profile Form*) என்ற விண்ணப்பப் படிவத்தை நீங்கள் நிரப்பவேண்டும். அடுத்து நீங்கள் 'ஆஸ்ட்ராக்'-இல் சேர்க்கப்பட்டு பதிவு செயப்பட இயலுமா என்பதைத் தீர்மானிக்க இந்தப் படிவத்தில் உள்ள தகவல்களை நாங்கள் மதிப்பீடு செய்வோம்.

இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்வது எப்படி என்பதைப் பற்றிய படி நிலைகளிலான அறிவுறுத்தல்களை எமது வலைத்தளத்திலுள்ள 'ஆஸ்ட்ராக்' வர்த்தக விபரப் படிவம் (ABPF) விளக்க வழிகாட்டி'(*Austrac Business Profile Form (ABPF) Explanatory Guide*)-யில் காணலாம்.

உங்களுடைய சேர்க்கையும் பதிவும் 'ஆஸ்ட்ராக்'-இனால் அங்கீகரிக்கப்பட்டும், பண வெளுப்பு மற்றும் பயங்கரவாத நிதியளிப்பிற்கு எதிரான பாதுகாப்பு வழிமுறைக((AML/CTF))ளை நீங்கள் அமல்படுத்தியும் இருந்தால் மட்டுமே உங்களால் பணம் அனுப்பு சேவைகளை வழங்க ஆரம்பிக்க இயலும்.

## பதிவு செய்யப்பட்ட பிறகு நீங்கள் செய்யவேண்டியவை:

1. குறிப்பிட்ட சில பண மாற்றல்களையும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் விடயங்களையும் 'ஆஸ்ட் ராக்'-கிற்குத் தெரியப்படுத்த வேண்டும்.

2. பண வெளுப்பு மற்றும் பயங்கரவாத நிதியுதவி சம்பந்தப்பட்ட ஆபத்துக்களை அடையாளம் கண்டு, அவற்றை மட்டுப்படுத்தி நிர்வகிப்பதை உள்ளடக்கிய கடப்பாடுகளை உங்களுடைய வர்த்தகம் பூர்த்தி செய்யும் முறைகளைக் கோடிட்டுக் காண்பிக்கும் திட்டத்தினை உருவாக்க வேண்டும்.
3. விதிமுறை இணக்கக் கடப்பாடுகளை நீங்கள் எவ்வாறு பூர்த்தி செய்கிறீர்கள் என்பதைப் பற்றிய ஆவணங்களை இருப்பில் வைத்து 'இணக்க அறிக்கை' (compliance report) ஒன்றை 'ஆஸ்ட்ராக்'-கிற்குச் சமர்ப்பிக்கவேண்டும்.
4. உங்களுடைய பணம் அனுப்பல் சேவையில் செய்யப்படும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை 'ஆஸ்ட்ராக்'-கிற்கு அறிவிக்க வேண்டும்.

நீங்கள் கட்டாயமாகச் செய்யவேண்டிய காரியங்கள் என்ன என்பதைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு austrac.gov.au/obligations எனும்வலைத்தளப் பக்கத்தினைப் பாருங்கள்.

முக்கியம்

பதிவு செய்யப்படாத பணம் அனுப்பல் சேவை வழங்குனர்களைப் பற்றி 'ஆஸ்ட்ராக்'-கிற்குத் தெரிவிப்பதன் மூலம் சமூகத்தினரைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்வதில் உங்களால் உதவ இயலும். அநாமதேயமான புகார் ஒநன்றைச் செய்ய austrac.gov.au/report எனும் வலைத்தளப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.

பதிவு செய்யப்படாத பணம் அனுப்பல் சேவைகளைச் செய்துவரும் தனிநபர்கள் மற்றும் வர்த்தகங்களுக்கு ஏழு வருடங்கள் வரைக்குமான சிறைவாசம் அல்லது $420,000 அபராதம் அல்லது இவை இரண்டும் விதிக்கப்படக்கூடும்.

## மேலதிகத் தகவல்கள்

'ஆஸ்ட்ராக்' -உடன் பதிவு செய்வதைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு நீங்கள்:

- இன்னும் அதிக விபரங்களைக் கொண்ட ஆங்கிலத்திலுள்ள தகவல்களுக்கு www.austrac.gov.au/registernow எனும் வலைத்தளப் பக்கத்தினைப் பார்க்கலாம்
- 1300 021 037 -ஐ அழைக்கலாம் (ஆஸ்திரேலியாவிற்குள்ளாக உள்ளூர்க் கட்டண அழைப்புச் செலவு)
- contact@austrac.gov.au- இற்கு மின்னஞ்சல் அனுப்பலாம்

மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால் 'TIS நேஷனல்' -ஐ 131 450 -இல் அழைத்து 1300 021 037-இல் 'ஆஸ்ட்ராக்' உடன் பேசவேண்டுமெனக் கேளுங்கள்.